T/455
1909/III

# THE KUMBAKONAM
# Mahamakham Festival.

கும்பகோணம்

## மஹாமக மஹான்மியம்.

428

Q23:43.2 1193K
N09

உ

கடவுள் துணை.

# கும்பகோணஸ்தல புராணம்.

## பரமசிவனை வணங்கிப் பிரமதேவர் வரம்பெறுதல்.

முன்னொரு காலத்தில், பிரமதேவர் பிரளய காலம் உண்டாகுவதையறிந்து, அதை விண்ணப்பஞ்செய்தற்குக் கைலாஸத்தையடைந்து, சிவபெருமானை வணங்கப்போயினர். போனவர் அங்கே திருநந்திதேவர் திருவடியைவணங்கித்தாம் வந்தகாரியத்தைக் கூறி அவர்செலுத்த உள்ளே புகுந்து, உரோமம் சிலிர்க்கவும் சிந்தையுட் கவலையெல்லாம் தீரவும் விழிகள் குளிரவும் சிவபெருமானைத் தரிசித்து, அஷ்டாங்கமாகவணங்கியெழுந்து, கைகூப்பிநின்று, "அழிவில்லாத ஆனந்தத்தேனே! அற்புதக்கூத்தா"! என்று துதித்து எதிரே நின்றார். சிவபெருமான் பிரமதேவரைநோக்கி, "உளத்திற்கொண்ட எண்ணம் யாது? கூறுக" என்று திருவாய்மலர, பிரமதேவர், "முதல்வனே! பிரளயகாலம் வருதலால் ஜகமெலாம் ஒழியும்; வேதசாஸ்திரங்கள் ஒழியும். உன்னால் தரப்பட்ட சிருஷ்டிபீஜங்கள் நசித்தால் நான் திரும்ப எப்படி சிருஷ்டிசெய்வேன்" என்றனர். அதைக்கேட்ட பரமசிவன், "நாம் உனக்கு அளித்த சிருஷ்டிபீஜம் ஒருகாலத்தும் நசிப்பதில்லை; அப்படி நசிப்பதில்லையாயினும் கையில் நின்றும் நீங்காவண்ணம் நீ அதைக்காத்தல்வேண்டும். அதற்கு உபாயம் கூறுவோம்; கேட்பாயாக: அமுதத்தைக்கொண்டு மண்ணைப்பிசைந்து மாயாமயமான கடம் ஒன்றைச்செய்து, அதனுள் அமுதத்தை நிரப்பி அதன் நடுவில் நாம் முன்னங்கொடுத்த சிருஷ்டிபீஜத்தைவைத்து நாற்புறத்தும வேதம், ஆகமம், வேதாங்கம், புராணம், இதிஹாஸம், இவற்றைப்பரவவைத்து, தேங்காயையும் மாவிலையையும் மேலேவைத்து, மேலே பூணூல் சாத்தி, உன்னுடைய இருப்பிடமாகிய மேருசிகரத்திலே உறியில்வைத்துத் தருப்பையாற்செய்த கூர்ச்சத்தை அதிற்சேர்த்து அமிர்தத்தாற் புரோக்ஷணஞ்செய்து வில்வதளத்தால் அருச்சித்துக்கொண்டிரு. சில நாளில் வெள்ளம் பெருகி மூடும்; மூடும்போது அந்தக்குடம் மிதக்கும். அது மிதந்து [illegible]கடலோடு தெற்கேசென்று கடலுக்கு மேற்கே திரும்பிச்செல்லும்போது ஓரிடத்தில் மாவிலை வீழ்ந்து வன்னிமரமாகும்; குசையும் வீழ்ந்தி

டும். நமது கட்டளைப்படி ஏழுகன்னிகைகள் காப்ப கூர்ச்சம் நமது லிங் மாய்த்தோன்றும். அதற்கு வாயுதிக்கில்[1] ஒ குரோச தூரத்தில் ஒரு ஓமவெளியில் அந்த குரம்பம் தங்கும். பின்னர் யாமே ஒரு வே வடிவத்தோடு வந்து அம்பினால் அக்குடத்தை சேதிக்க அதிலுள்ள அமிர்தம் வெளிப்பட்டு ஐந்துகுரோச அளவா இடத்தை நனைக்கும். அந்தக்கும்பத்தின் கீழ்த்திசையில் ஒரு தீ தத்தை அமைப்போம். அதன் கீழ்ப்பக்ச [2] சிக்கம் சென்று ஒரு லிங்கமாய் ஆவிர்ப்பவிக்கும். வில்வம் முதலியனவும் அப்படியே பரிணமிக்கும். புண்ணியமான அக்கும்பத்தினுள்ளே மணலைச்சேர்த்து லிங்கமாக்கி விதிப்படி பூஜித்து அதனுள்ளே யாம் மறைவோம். அதைப் பூஜித்துப் பலரும் இஷ்டஸித்திகளைப் பெறுவர். உன்னிருப்பிடம் செல்வாயாக" என்றுகட்டளையிட, பிரமதேவர் மடைதிறந்தொழுகும் அன்போடு மீட்டும் வணங்கித்துதித்து விடைகொண்டு மேருவையடைந்து, அமிர்தத்தைத்தெளித்து மண்ணைப் பிசைந்து கும்பத்தை யுண்டாக்கி மேலே நூல்சுற்றி அதனுள்ளே அமிர் சயும் சிருஷ்டிபீஜம் முதலியவற்றையும் சேர்த்துத் தேங்காயினையு ையையும் வைத்துத் தருப்பையை முடிந்து அதன்மேலிட்டு யஜ் ம் சாத்தி வில்வத்தைக்கொண்டு விதிப்படி அருச்சித்துச் சிக்ச வத்துப் பரமசிவன் திருவருளையே சிந்தித்துக்கொண்டிருந்தார்.

(1.) ஸம்ஸ்கிருத புராணத்தில் அக்கினிதிக்கில் என்று இருக்கிறது.

(2.) உறி.

(அமிர்தகடம் மிதந்து வந்து தங்க இக்ஷேத்திர முண்டாதல்.)

இப்படியிருக்கும் நாட்களில் ஒருநாள், ஏழுகடல்களும் ஒன்றுகி பெரும்புறக்கடலோடும் கலந்து உலகமுழுதும் மறையும்படி ஒரு ஜலப்பிரளயம் உண்டாயிற்று. பரமசிவனுடைய கட்டளைப்படி. பெருவெள்ளம் மூடுதலும், மிக்ககாற்றும் உடனே எழுந்தது. அக்காலத்தில் சந்திரசூரியர்களுமில்லை. திக்குவிதிக்குகளுமில்லை. இருதிணைகளுமில்லை. எங்கும் ஜலமயமாயேதோற்றிற்று. மேருவும் முழுகிப்போயிற்று. அப்பொழுது சிவபிரானருளால் அந்த மாயாமய கும்பம் அசைந்தது. அது தருப்பையுறியோடு வெள்ளத்தில்மிதந்து, காற்றினால் அசைக்கப்பெற்று, கீழ்கடலின் வழியே மெல்ல மெல்லத் தெற்கேசென்று, கடலின் மேற்கே நெடுந்தூரம் போய், அலைந்து சுழலுங்கால், தருப்பையும் மாவிலையும் ஆங்கு வீழ்ந்தன. மாவிலை வன்னிமரமாகவும் தருப்பையதன்கீழே ஒருசிவலிங்கமாகவும் ஆயின. அவ்விலிங்கத்தை ஏழு கன்னிகைகள் ஜலரூபமாய் வளைந்து காத்திருந்தனர். அதன் வாயுதிக்கில்[1] ஒருகுரோச எல்லையில் அமிர்தகும்பம் சென்று தங்கியது. அத்தலமே சிறந்ததென்று அசரீரிவாக்கு எழுந்தது. மலர்மழை பொழிந்தது. அப்பொழுது

(1.) அக்கினிதிக்கில் என்று வடமொழிப்புராணம் கூறும். அதனால் அது திருப்புறம்பயமென்னும் ஸ்தலமென்று தெ⁰ிறது.

பிரளயவெள்ளம் வடிந்தது. விடாது தொடர்ந்துவந்த பிரமதேவர் வியப்படைந்து கண்ணீர் சொரிந்து களிநடம்புரிந்தார். அப்பொழுது உறி கீழ்த்திசையிற்சென்று ஒரு சிவலிங்கமாயிற்று[1]. தேங்காய் அக்கினிதிக்கில் ஒரு செவ்விளநீர்மரமாக அதன் கீழே ஒரு சிவலிங்கம் முளைத்தது. அறிஞர் அதனை நாரிகேளேசுவரர்[2] என்பர். வில்வதளங்கள் கீழ்த்திசைசென்று வில்வவிருக்ஷங்களாக அவற்றினிடையே பாதாளேசுவரர்[3] ஆவிர்ப்பவித்தனர். குடத்திற் சாத்திய உபவீதம் நாரிகேளத்தின் மேல்பாற்சென்று ஒரு சிவலிங்கமாகி யஜ்ஞோபவீதேசர்[4] என்னும் பேரோடுவிளங்கியது. அந்தமாயாமய கும்பம் இப்படிப் பல க்ஷேத்திரங்களை யுண்டாக்கினமையால் க்ஷேத்திரபீஜகும்பமென்னப்படும்.

(1.) இந்த மூர்த்திதான் ஸோமேசர் ஆலயம். சாரங்கபாணி கோயிலுக்குத் தெற்கே யுள்ளது.

(2) இம்மூர்த்திதான் அபிமுகேசர் மகாமகக்குளத்தின் கீழ்கரையிலுள்ளது.

(3.) நாகேசுவரர்.

(4.) கௌதமேசர் கோயில் மகாமகக்குளத்தின் தென்மேற்கிலுள்ளது.

### (பரமசிவன் வேடரூபமாக வந்தது.)

பரமசிவன் கும்பத்தினைக் காணவிரும்பி வேடவடிவங்கொண்டு வில்லும் அம்புப்புட்டிலுந்தாங்கிக் கைலையினின்றும் எழுந்தருளினர். சிவகணங்களும் அதற்கேற்பக் கிராதவடிவங்கொண்டு நிழல்போலப் பின்சென்றனர். சிவபெருமான் உமாதேவியாரைப்பார்த்து, "ஒருகாரியநிமித்தம் வெளியேபோய்வருவோம்" என்றுகூறிக் கைலையினின்றிறங்கிப் பல தலங்களைக்கடந்து சோழநாட்டையடைந்து திருவிடைமருதூரின் கீழ்த்திசையில் நின்று மேற்றிசையில் அமிர்தகடம் தங்கியிருப்பதைப் பார்த்து, "இந்தக்குடத்திலுள்ள அமுதம் எங்கும் வழிந்து பெருகும்படி செய்வோம்" என்றுரைத்தனர். உடன்வந்தவர்களுள் சாஸ்தாவானவர் அதனையறிந்து கிராதவடிவங்கொண்ட பரமசிவனை வணங்கி, "பெருமானே! தேவரீர் சொல்லியபடிசெய்தல் அழகியதே. உலகினுக்கு இஃது ஓர் உபகாரமேயாகும்" என்றுகூறித் தம் தூணியிலிருந்த ஒரு கூரிய பாணத்தையெடுத்து முதல்வர் திருக்கரங்களிற்கொடுக்க, அவர் அதனைவாங்கி, சாஸ்தாவைப் பார்த்து, "நீ கொடுத்தபாணம் அக்குடத்தைச் சிதையாது; நமது தூணியிலுள்ள வேறொருபாணம் அது செய்யவல்லதாகும். இதன் உண்மையைக் காண்க" என்று சாத்தனார்கொடுத்த பாணத்தை யெய்ய, அஃது அக்கும்பத்தை ஒரு தீங்கும்செய்யாமல் விழுந்தது. அதுகண்டு சாத்தனார் வெட்கமுற்றனர். சிவபெருமான் சாஸ்தாவைப்பார்த்து, "இன்றுமுதல் உனக்கு எசபாணசாஸ்தாவென்று பேர் உண்டாகுக" என்று அருள்புரிந்து பின்னர் மேற்கே சிறிதுதூரம் சென்று தமது மாயாமபகடம்,

அது பாணாதுறை.

இருந்த திக்கிற்கு ஈசானபாகத்தில் நின்று ஒரு கணைதொடுத்தனர். அது அக்குடத்தைச் சிதைத்துக் கவிழ்த்தது. குடத்தினின்றெழுந்த கோணமானது மேலே யெழுந்து அக்கினிதிக்கில் ஒரு யோசனைதூரஞ்சென்று வீழ்ந்து அங்கு ஒரு லிங்கமாய் முளைத்தது. அறிஞர் அவ்விடத்தினை குடவாயிலென்றும் அவ்விலிங்கத்தைக் கோணேசர் என்றும் கூறுவர்.

(கும்பேசர் உற்பத்தி.)

குடமூக்கினின்றும் பெருகிய வமுதம் நாற்புறத்தினும் ஐந்து குரோச அளவுசென்று நனைத்தது. வேடரூபியாகிய பரமசிவன் அந்தக் குடத்தினருகே சென்றனர்; செல்லும்போது குடத்தின் நேர்கிழக்கிலும் தென்கிழக்கிலும் அவ்வமுதம் தங்கும்படி பூமி இடங்கொடுக்கவெனத் திருவுளத்திற் சிந்திக்க அங்ஙனமே (1) இரண்டு குளங்கள் உண்டாயின. அவற்றிற்கு அமுதவாவியென்று பெயர் கூறுவர். பரமசிவன் "எவ்விதமானபாவம் புரிந்தோரும் இவற்றிடையே மூழ்கிப்பரிசுத்தராவர்" எனத்திருவுளத்தெண்ணிக்கொண்டு அமுதகும்பத்தை யணுகினர். அமுதங்கலந்து நனைத்த மணலையெல்லாம் பரிசுத்தமான கும்பத்திற்சேர்த்து ஒரு சிவலிங்கமாக்கி அதைப்பூஜித்து வேடரூபத்தை மறைத்து ஜோதிரூபமாய் அவ்விலிங்கத்தினுள் மறைந்தருளினர். குடத்தினின்றும் பெருகிய வமுதம் ஐந்துகுரோச எல்லையை நனைத்தமையால் பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களைக் கும்பகோணஸ்தலமென்றே கூறுவர். பிரமசிருஷ்டிக்கு ஆதியிலுண்டானமையாலும் ஆதியில் கும்பத்திலுண்டானமையாலும் ஆதிகும்பேசர் என்றும் அமுதகும்பத்தி லுண்டானமையால் அமுதகும்பேசர் என்றும் அறிவுடையோர் கூறுவர்.

(1.) ஸம்ஸ்கிருத புராணம் இவை முன்னமே உள்ளனவென்று கூறுகின்றது.

(மங்களநாய்கி எழுந்தருளியது)

உமாதேவியார், பரமசிவன் அமுதகடத்தினுள் மறைந்தருளியதைப் பிரமதேவர் முதலிய தேவர்களாலறிந்து, மிக்கமகிழ்ச்சிகொண்டு, அவ்விடஞ்செல்லக் கருதி எழுந்து, பணிப்பெண்கள் பின்தொடரவும், வேதங்கள் முழங்கவும், குடையும் கொடியும், கவரியும் குலாவவும், தெய்வப் பெண்களும் பூமாதும் கலைமாதும் புடைசூழவும் கைலையினின்றும் நீங்கிச் சோணாடடைந்து திருவிடைமருதூரையுற்று பஞ்சக் குரோச க்ஷேத்திரங்களைவலம்வந்துதோத்திரஞ்செய்து கும்பகோணத்தையடைந்துகும்பேசர் (1)ஸந்நிதியிலுள்ளதீர்த்தத்திலும் (2) அக்கினி திக்கிலுள்ள தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து அமிர்தகடேசனைத் தரிசித்துஸந்நிதியிற் பணிந்து அஞ்சலிசெய்துஎதிரே நிற்க, சிவபெருமான் நோக்கி, "கைலாயத்தினின்றும் இங்கெப்பொழுது

(1.) ஸந்நிதியிலுள்ள தீர்த்தம் பொற்றாமரை.

(2) அக்கினி திக்கிலுள்ள தீர்த்தம் மகாமகதீர்த்தம்.

வந்தனை" என்று வினவ, உமாதேவியார், "அடியேன் இன்றே இவண் வந்தனன்" என்று கூறித்தொழுது நின்றனர். சிவபெருமான் அருள்கொண்டு நோக்கி, "தமக்கு இடப்பாகத்தில் இருப்பாயாக" எனக்கூற, உமாதேவியார் அமிர்தகடேசுவரருக்கு வடபால் ஸாரவிமானத்தின் கீழே மந்திரபீடத்தில் தேவர்கள் வாழ்த்தொலி செய்யக்கோயில் கொண்டெழுந்தருளினர். யாவர்க்கும் மங்களத்தையே அளித்தலால் அவருக்கு மங்களநாயகியென்னும்பேர் வழங்கலாயிற்று.

(பிரமதேவர், ஆலயமும் நகரமும் நிருமித்தது.)

பிரளய வெள்ளம் நீங்கியபின் பிரமதேவர் சிருஷ்டி பீஜத்தைக் கைக்கொண்டு உலகத்தை யுண்டாக்க நினைத்து, தேவர்களோடு ஆலோசித்து விசுவகர்மாவை நினைக்க, அவன் வந்தனன். வருதலும், அவனைப் பார்த்து, "பஞ்சக்குரோசத்தில் திருநகரமும் அமிர்தகடேசுவரருக்கும் மங்கள நாயகிக்கும் மற்றப் பரிவார தேவர்க்கும் ஆலயமும் அமைப்பாய்" எனக்கூற, விசுவகர்மா சிவபெருமானைத் தொழுது ஸந்நிதியிலும் அக்கினி திக்கிலுமுள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தெழுந்து விபூதியணிந்து உருத்திராக்ஷ மாலை தரித்து பஞ்சாக்ஷர ஜபம்செய்து விநாயகனை ...ட்டு ஆலய நிர்மாணமுஞ்செய்து இரண்டு குளங்களுக்கும் படிகளமை அழகிய பலவீதிகளமைந்த நகரத்தையும் சிருஷ்டித்துப் பிரமதேவருக்கு தெரிவித்தனன். பிரமதேவர் மற்றத்தேவரோடும் எழுந்து, உமாகாந்தனாகிய பரமசிவனுடைய ஆலய முதலியவற்றையும் நோக்கி அகமகிழ்ந்து விசுவகர்மாவுக்கு மிக்க சன்மானஞ்செய்தனுப்பினர். ஆலயத்துக்குவேண்டிய எல்லாப்பொருள்களும் வித்தஞ்செய்வித்து ஆதிசைவர்களைக்கொண்டு ஆதிகும்பேசுவரருக்கும் மங்கள நாயகியாருக்கும் மற்றப் பரிவாரதேவதைகளுக்கும் கும்பாபிஷேகஞ்செய்வித்து, அகம்படித் தொண்டுக்குரியாரை நியமித்து, நித்திய நைமித்திக பூஜைகளைக் குறைவற நடத்தி, நான்முகக் கடவுள் உளமகிழ்ந்திருந்தனர்.

116760

(பிரமதேவர், மகோத்ஸவம் செய்தது.)

அவர் ஆதிகும்பேசுவரருக்குக் கும்பமாஸம் சிறந்ததெனக்கருதி, அந்த மாஸம் சுக்கில பக்ஷத்தில் அசுவினி நக்ஷத்திரத்தன்று தேவர்களாலும் முனிவர்களாலும் தேவலோகத்திலுள்ள அமுதம், ஆவின்பால், கற்பகப்பூ, கங்கை முதலிய புண்ணிய தீர்த்தம், ரத்னாபரணங்கள், பீதாம்பர முதலியவற்றை வருவித்துக்கொண்டு கும்பேசர் ஸந்நிதியிலுள்ள தீர்த்தத்திலும் அக்கினி திக்கிலுள்ள தீர்த்தத்திலும் ஸ்நானம்செய்து விபூதிருத்திராக்ஷந்தரித்து பஞ்சாக்ஷர ஜபஞ்செய்து ஸந்நிதியடைந்து அமிர்தகடேசுவரரை ஆகமவிதிப்படி பூஜித்து, உள்ளம் நெக்குருகிக் கண்ணீர் வெள்ளம்

பெருக்கெடுப்ப, உரோமஞ் சிலிர்ப்ப உள்ளத்தில் தியானிக்கும் காலத்தில் பரமசிவன் பிரஸன்னமாயினர். பரமசிவன் எதிர்தோன்றலும், பிரமதேவர் எழுந்து கரங்குவித்து வலஞ்செய்து வெட்டி முறித்த மரம்போல் விழுந்து எழுந்து எதிர் நிற்ப, சிவபெருமான் உள்ள மகிழ்ந்து, "பிரமனே! உனக்கு வேண்டும் வரங்கேள்" எனப் பணித்தனர். பிரமதேவர், "இவ்விடத்து நின்னை ஒருகால் தரிசித்தோரும் எண்ணியவற்றை எண்ணியாங்குப் பெற வேண்டும். மாகமாஸபூர்ணமியோடு கூடிய மகநக்ஷத்திரத்தில் அக்கினி திக்கி லுள்ள தீர்த்தத்தில் எல்லாத் தீர்த்தங்களும் வருதல்வேண்டும். அன்று அந் தத் தீர்த்தத்தில் யார்வந்து மூழ்கினும் எல்லாப் பாவங்களினும் நீங்கிப் பரிசுத்தராய் நற்கதிபெறல்வேண்டும். பன்னிரண்டு வருஷத்திற்கொருதரம் சிங்கராசியில் குருவரும்போது யான் தேவர்களோடு வந்து அந்தமகோற்ச வத்தைச் செய்வித்தல் வேண்டும்" என்பன முதலிய பல வரங்களைக் கேட் டனர். கேட்க, அமிருதகடேசர், "அங்ஙனமே ஆகுக" என்று அருள் புரிந்து லிங்கத்தினுள் மறைந்தனர். பிரமதேவர் ஆதிகும்பேசர்க்குத் திரு விழா நடத்தக்கருதி நகரெங்கும் பறையறைவித்து, தேவர்களும் பல தேச த்தரசர்களும் பெருந்திரளான மனிதர்களும் நெருங்க, துவஜாரோகண முதல் பத்துத்திருவிழாவையும் நடத்தி, அக்கினி திசையிலுள்ள தீர்த்தத் தில் அவபிருதமுஞ் செய்வித்தனர்.

(கங்கை முதலிய நவகன்னியர்கள் வருதல்.)

முன் ஒரு காலத்தில், கங்கை, யமுனை, நருமதை, ஸரஸ்வதி, கோ தாவரி, காவேரி, பயோஷ்ணி, ஸரயு, கன்னி யாகுமரி(1) யென்று சொல்லப்பட்ட ஒன்பது நதி களும் ஆன்மாக்கள் தம்மிடத்து வந்து மூழ்கிப் போக்கிய பாவங்கள் தம் மை வருத்துதலால், அவற்றை தாங்கமாட்டாமல், "யாம் கைலாயத்தை யடைந்து சிவபெருமானிடத்து முறையிடுவோம்" என்று எண்ணி ஓரிடத் திற்கூடி ஒன்பது கன்னிகைகளாகி, கைலையங்கிரியையடைந்து சிவபெரு மான் ஸந்நிதிபுக்குத் திருவடி தொழுது தங்களுக்குள்ள குறையைத் தெரி வித்தனர். கன்னியர் கூறிய வார்த்தையைச் சிவபெருமான் திருச்செவியேற் றுப் புன்முறுவல்செய்து, "நதிகளே! நீவிர் சிந்திக்கவேண்டாம்; கும்ப கோண க்ஷேத்திரத்தில் ஆக்னேய பாகத்தில் ஓர் தீர்த்தமுண்டு. சிங்கரா சியில் குரு இருக்கின்ற மகாமககாலத்தில்அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் நும்முடைய எல்லாப் பாவங்களும்நீங்கும். அஃது இக்கைலங் கிரியினும் பரிசுத்தமுடையது. நம்முடைய பிரியமெல்லாம் அவ்விடத்து ப்பதிந்துள்ளது. அம்மகாமக புண்ணிய காலமும் ஸமீபித்திருக்கின்றது. நீவிர் அப்பொழுது அவ்விடஞ்சென்று ஸ்நானஞ்செய்யுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருள, ஒன்பது கன்னிகைகளும் சிவபெருமான் திருவ

(1.) பாலாறு.

பில் தாழ்ந்து, "நாதனே! அத்தலம் எங்குள்ளது; அத்தீர்த்தம் எவ்…த்திருக்கின்றது என்பதையறியோம்" என்று கூற, கருணை மூர்த்தியாகிய சிவபெருமான் சிறிது பொழுது திருவுளத்திலெண்ணி அவர்களை பார்த்து, "நீங்கள் காசிக்ஷேத்திரத்தை யடைந்து அங்குச்சிலநாள் …ப்பீர். யாம் அங்கேவந்து உம்மையழைத்துக்கொண்டு விசுவநாதரென்னும் பேரோடு குடந்தைக்குச்செல்வோம்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

கன்னியர்கள் அவரை நீங்கிக் காசிக்ஷேத்திரத்தில் போய் வஸித்தனர். சிவபிரான் காசியில் வந்து கன்னியர்களை யழைத்துக்கொண்டு கும்பகோணத்தையடைந்தனர். அடைந்து, "மங்கைமீர்! முன்னை நாம் அமுதகடத்தில் விளங்கியஸ்தலம் இதுவாகும்" என்று கூறி அதனை வணங்குவித்து அதன் கீழ்பாலுள்ள அமிர்ததடாகத்தில் ஸ்நானஞ்செய்வித்து அதன் மேல்கரையிலுள்ள ஆதி கும்பேசுவரரையும் சிக்கஞ் சார்ந்த இடத்திலுண்டாகிய மூர்த்தியையும் அப்புகோத்துவிட்ட இடத்திலுண்டான மூர்த்தியையும் வில்வதளம் வீழ்ந்த இடத்திலுண்டான மூர்த்தியை… வணங்கச்செய்து, அக்கினிதிக்கிலுள்ள தீர்த்தக்கரையை யடைந்த… …ங்கே செல்லும்போது வாத்தியகோஷத்தாலும் வேதஒலியாலும் பெ… …க்கமுண்டாயிற்று. நாரிகேளவிருக்ஷத்தினடியிலிருந்த சிவபெருமா… …க்கு நோக்கியிருந்ததைவிட்டு மேற்குமுகமாக திரும்பினர். கன்னியர் அதனை நோக்கி மிக்க வியப்புற்று விசுவநாதரை யடிபணிந்து, "இவர் மேற்குமுகமாய்த்திரும்பியது யாதுகாரணம்? உரைத்தருள்க" என்று வேண்ட, சிவபெருமான் முன்னம் யாம் நாரிகேளவிருக்ஷத்தினடியில் எழுந்தருளியிருந்தோம்; இன்று நீங்கள் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்ய வந்தமையால் அந்தத்தீர்த்தத்தை நோக்கித்திரும்பினோம்" என்று கூறலும், கன்னியர், "பெருமானே! தேவரீர் என்றும் இப்படியே யிருத்தல் வேண்டும். தீர்த்தத்துக்கு அபிமுகமாகத்திரும்பினமையால் உமக்கு அபிமுகேசர் என்னும் பெயர் வழங்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, சிவபெருமான், "அங்ஙனமே ஆகுக" என்று பணித்துத் தீர்த்தத்தை வலமாகச்சென்றனர். கன்னிகைகளோடும் தடாகக்கரைவழியே செல்லும்போது, மேல்கரையில் கிழக்குமுகமாய் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியை அவர்களுக்குக்காட்டி, "இது கும்பத்திலிட்ட யஜ்ஞோபவீதம் வீழ்ந்த இடம். இங்கே யாம் உத்தமலிங்கமாக விளங்குவோம்" என்றுகூறி, குளத்தின் வடகரைக்கண் வந்தனர். தேவர்கள் ஹர ஹர முழக்கஞ்செய்யவும், புஷ்பமாரி பொழிந்து துதிக்கவும், ஆன்மகோடிகள் ஆனந்தவெள்

ளத்திலாழவும், அங்கே மேற்குமுகமாக எழுந்தருளினர். விசுவநாதர் எழுந்தருளியிருத்தலை நோக்கி ஒன்பது கன்னிமாரும் தெற்குமுகமாக அங்கே தங்கினர். இன்றும் ஸ்திரீகள் இந்நவகன்னியர்களைப் பூஜித்துத் தங்கள் இஷ்டகாமியங்களைப் பெறுகிறார்கள். ஸாவித்திரி, அருந்ததி, அநஸூயை, சாயாதேவி, ஸதி, தமயந்தி, ரதி, ருக்மணி இவர்கள் இந்த நவகன்னியர்களை வழிபட்டு, இஷ்டஸித்திகளைப் பெற்றவர்களாவர்.

மகாமகதீர்த்தத்தின் பெயர்களாவன :—

பாபாபனோதன தீர்த்தம், ஸுதாதீர்த்தம், கன்யாதீர்த்தம், மஹாமகதீர்த்தம், பஹுதீர்த்தம் என்பன.